மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 9—1—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலருடைய பதவி நீட்டிப்புக் காலத்தை ஜுன் 30 ஆம் தேதிவரை நீட்டித்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர், மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர்., தலைவர் கலைஞர், மறைந்த அம்மையார் ஆகியோருடைய காலங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை ஒரே கட்டமாக நடத்தி முடித்திருக்கின்றார்கள். ஆனால், பல கட்டங்களாக அந்தத் தேர்தலை நீங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றீர்கள். விடுபட்ட 9 மாவட்டங்களில் ஒரு மாவட்டம் எங்களுடைய வேலூர் மாவட்டம். இதைப் பார்க்கின்றபொழுது, 2020 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக மாறி விடுமோ என்கின்ற ஐயம் இருக்கின்றது. காரணம், அதிக சதவிகிதம் வெற்றி பெற்றது திராவிட முன்னேற்றக் கழகம். 9 மாவட்டங்களில் இருக்கக்கூடிய வார்டுகளுக்கு ஒரு தேர்தல், ஊராட்சிக்கு ஒரு தேர்தல், 5,000 வாக்குகளுக்கு ஒரு தேர்தல், மாவட்டத்திற்கு ஒரு தேர்தல், எங்கள் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாநகராட்சிக்கு ஒரு தேர்தல் என தேர்தல்களை நீங்கள் நடத்துவீர்களோ என்ற ஓர் ஐயம் இருக்கிறது. காரணம், தனி அலுவலருக்கு ஆறு மாத காலத்திற்கு பதவியை நீட்டித்துத் தந்திருக்கின்றீர்கள். நான், உங்களைக் குறிப்பிட்டுக் கேட்டுக்கொள்வது, இந்த அரசைக் குறிப்பிட்டுக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நாங்கள் தொகுதிப் பக்கம் சென்றோம் என்றால், மிகவும் சிரமமாக இருக்கின்றது. காரணம்,* light *எரியவில்லை, தண்ணீர் இல்லை என்கின்ற பிரச்சினைகளை அதிகமாக நாங்கள் எதிர்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* Bill*–ன்மீது பேச வேண்டும். தனி அலுவலர் பதவி கால நீட்டிப்பைப் பொறுத்தளவுக்கு ஏற்கெனவே நான் விரிவாகப் பதில் சொல்லிவிட்டேன். அந்த இரண்டு விஷயங்களுக்கும் சேர்த்துப் பதில் சொல்லியாகிவிட்டது. இன்னும் 9 மாவட்டங்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்*

அவர்களே சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது தனி ஆணையம். தேர்தலைப் பிரித்து நடத்துவது எல்லாம் அவர்களுடைய விதிமுறைகளுக்குட்பட்டு, அவர்கள் செய்கிறார்கள். அது தனி. அதைப் பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லக் கூடாது. அவ்வாறு தேர்தலை நடத்த அவர்களுக்கு எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்திற்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டு அவர்கள் செய்கிறார்கள். இதில் நடக்காததைப் பற்றி, மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்துவீர்களா, என்பது பற்றியெல்லாம் பேசவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இதைப் பொறுத்தவரையில் S.O. எதற்காக, தனி அலுவலர் எதற்காக என்பது பற்றி தெளிவாக, விளக்கமாக மூன்று பக்கங்கள் அளவிற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். அதைப்போல, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அண்ணன் அவர்கள் பேசும்போது உள்ளாட்சிகளில் விளக்குகள் எரிவதில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்தளவுக்கு நாம் LED lights–ஐப் பொருத்தியிருக்கிறோம். கிட்டத்தட்ட வருடத்திற்கு ரூ.400 கோடி அளவிற்கு மின்சேமிப்பு ஏற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் 2013–2014 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டது. அதிலும், இதுபோன்ற சில complaints வருகின்றன என்பதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் வரச்சொல்லி அங்கிருக்கின்ற சூழ்நிலைகளைப் பொறுத்து, எங்களையெல்லாம், Senior Ministers–ஐயும் வரச்சொல்லி, அதைப்பற்றி தனியாகக் கவனம் செலுத்தி, அதற்காக இன்னும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் 10 சதவிகிதம், 12 சதவிகிதம் வரையில் தெரு விளக்குகள் எரியாமல் இருக்கும். அதிகமாக power வந்தாலும் சரி அல்லது ஏதாவது ஒரு பிரச்சினை என்றாலும் எரியாமல் போகும். இன்றைக்கு அந்த lights–ஐ supply செய்யக்கூடிய ஒப்பந்ததாரர்களிடம் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு warranty வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இவற்றில் ஏதாவது பழுது ஏற்பட்டால், அவர்களுடைய சொந்தப் பணத்திலேயே அவற்றைச் சரி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதுபோன்ற புதிய சட்டங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினைகள் எங்கிருந்தாலும் சரி செய்யக்கூடிய அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் அனுப்பி, அலுவலர்களை அனுப்பி,

2020 ஜனவரி 9] [திரு. எஸ்.பி. வேலுமணி]

தனிக் கூட்டங்கள் நடத்தி, அங்கிருக்கக்கூடிய பல்வேறு பணிகள், தெரு விளக்குகள் மட்டுமல்ல; பல்வேறு பணிகளைச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் அதுமாதிரி யாரும் ஆய்வு செய்ததில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பொது ஆய்வு நடத்தப்படுகிறது. அதுபோல, ஒவ்வொரு மாவட்டமாக அனைவரையும் அழைத்து ஆய்வுசெய்து,தற்போதுநடவடிக்கைஎடுக்கச்சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற பிரச்சினை எங்கிருந்தாலும் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இவற்றிற்கெல்லாம் ஏற்கெனவே நான் பதிலை விளக்கமாகச் சொல்லிவிட்டேன். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Special officer extension குறித்த பிரச்சினையெல்லாம் எதற்கு. ஒரு வரியில் சொல்லுங்கள், ஜனவரி 28 ஆம் தேதியன்று announce பண்ணப்போகிறோம். பிப்ரவரி 18 உங்களுக்கு தேர்தல் என்று சொல்லிவிடுங்கள், தேர்தல் முடிந்துபோய்விட்டது. அல்லது பேரூராட்சிகள், நகராட்சிகளுக்கெல்லாம் பிப்ரவரி 19 ஆம் தேதியன்று தேர்தல் என்றும் 28 ஆம் தேதியன்று அறிவிப்பு செய்யப்படும் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 2/2020), *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 2/2020)@ *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் என்பதன் பெயரை மாற்றி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மறைந்த அம்மையார் அவர்களின் பெயரைச் சூட்டுவதாக தெரிவித்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், இதில் மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை. ஆனால் ஒரு செய்தியை இந்த அவைக்கு நான் சொல்லவேண்டியிருக்கிறது.* 1981–1982 *ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் டாக்டர் எம்.ஜி.ஆர்*

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*